**1.இந்திய ரிசர்வ் வங்கியானது 371 F பிரிவின்கீழ், எந்த வங்கியை அதன் ஒழுங்குமுறை வரம்பிற்குள் கொண்டுவந்துள்ளது?**

அ) பஞ்சாப் தேசிய வங்கி

ஆ) HDFC வங்கி

**இ) சிக்கிம் வங்கி ☑**

ஈ) இந்தியன் வங்கி

✓ சிக்கிம் மாநிலம் இந்திய ஒன்றியத்தில் இணைவதற்கு ஐந்து ஆண்டுக–ளுக்கு முன்பு, கடந்த 1968'இல் சிக்கிம் வங்கி (State Bank of Sikkim) நிறுவப்பட்டது. சிக்கிம் மாநில அரசின் கருவூல நடவடிக்கைகளை அம் மாநில அரசுக்குச் சொந்தமான இவ்வங்கி வழங்கிவருகிறது. சமீபத்தில், இந்திய ரிசர்வ் வங்கி, சிக்கிம் ஸ்டேட் வங்கியை அதன் ஒழுங்குமுறை வரம்பிற்குள் கொண்டுவந்துள்ளது. இதன்மூலம் இவ்வங்கி மற்ற வங்கி–களுக்கு இணையாக கட்டுப்படுத்தப்படும் என்றாலும், அவ்வங்கியின் உரிமைத்துவ அமைப்பில் எந்த மாற்றமும் இருக்காது.

---

**2.அருணாச்சல பிரதேசமும் மிசோரமும் தங்கள் மாநில நாளை, பின்வரும் எந்தத் தேதியில் கொண்டாடுகின்றன?**

அ) பிப்ரவரி 15

**ஆ) பிப்ரவரி 20 ☑**




இ) பிப்ரவரி 25

ஈ) பிப்ரவரி 28

✓ 1986ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பின் 53ஆவது திருத்தத்தைத் தொடர்ந்து, 1987 பிப்.20 அன்று அருணாச்சல பிரதேசமும் மிசோரமும் மாநில அந்தஸ்தைப் பெற்றன. 1972 ஜன.20 அன்று, வடகிழக்கு எல்லை–ப்புற முகமையானது அருணாச்சல பிரதேச யூனியன் பிரதேசம் என, மறுபெயரிடப்பட்டது. 1987 பிப்.20 அன்று அருணாச்சல பிரதேசத்திற்கு மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது. மாநில அந்தஸ்தை அடைவதற்கு முன், 1972–1987 வரை மிசோரம் ஒரு யூனியன் பிரதேசமாக இருந்தது.

---

**3. உலகில் அதிகம் கடத்தப்படும் பாலூட்டி இனம் எது?**

அ) நீலத்திமிங்கலம்

**ஆ) எறும்புண்ணி ☑**



இ) வௌவால்

ஈ) கடற்பசு

✓ உலகில் அதிக அளவில் கடத்தப்படும் பாலூட்டிகள் எறும்புண்ணிகள் ஆகும். இயற்கை பாதுகாப்புக்கான பன்னாட்டு ஒன்றியமானது உலகில் உள்ள எண்வகை எறும்புண்ணிகளையும், "அச்சுறுத்தல்" நிலையில் உள்ளவை என்று வகைப்படுத்தியுள்ளது. அவற்றின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக பிப்ரவரி மாதத்தில் வரும் மூன்றாவது சனிக்கிழமையன்று உலக எறும்புண்ணிகள் நாள் கொண்–டாடப்படுகிறது. நடப்பாண்டில் (2021), பிப்.20 அன்று இந்த நாள் கொண்–டாடப்பட்டது. சுற்றுச்சூழலமைப்பில், எறும்புண்ணிகள், பூச்சிகளை கட்டுப்படுத்தும் காரணிகளாக கருதப்படுகின்றன.

---

**4. பின்வரும் எந்த யூனியன் பிரதேசத்தில், "அடல் பர்யவரன் பவன்" திறக்கப்பட்டுள்ளது?**

அ) புதுச்சேரி

ஆ) லடாக்

**இ) இலட்சத்தீவுகள் ☑**



ஈ) தில்லி

✓ இலட்சத்தீவுகள் வனத்துறையின் தலைமையகத்தை 'அடல் பர்யவரன் பவன்' என்ற பெயரில் மத்திய வனம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்ற அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் திறந்துவைத்தார்.

✓ இந்தியாவின் மூன்று தீவுகளுக்கான NITI ஆயோக் திட்டத்தின்படி, இல–ட்சத்தீவுகளில் பல்வேறு சுற்றுலாத்திட்டங்களுக்கு அனுமதிகள் வழங்க–ப்பட்டுள்ளன; அவை, இலட்சத்தீவின் வளர்ச்சி & வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கில் உள்ளன.

---

**5.தேசிய பட்டியலின சாதிகள் (SC) ஆணையத்தின் புதிய தலைவர் யார்?**

அ) போரிக்கா நாயக் பால்ராம்

**ஆ) விஜய் சம்ப்லா ☑**



இ) அருண் ஹல்தார்

ஈ) அஞ்சு பாலா

✓ முன்னாள் மத்திய அமைச்சர் விஜய் சம்ப்லா, அண்மையில் இந்தியக் குடி–யரசுத்தலைவரால் நியமிக்கப்பட்ட பின், தேசிய பட்டியலின சாதிகள் ஆணையத்தின் தலைவராக பொறுப்பேற்றார். அவர், 2014 முதல் 2019 வரை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் அமைச்சராக பணியாற்றியுள்ளார். இவருக்கு முன், ராம்சங்கர் கேத்ரியா இந்த ஆணையத்தின் தலைவராக பணியாற்றி வந்தார்.

---

**6.அண்மையில் வெளியிடப்பட்ட, 'ராஷ்டிர பிரதம்–82 வர்ஷோன் கி சுவர்னிம் கதா' என்பது பின்வரும் எவ்வாயுதப்படையை விவரிக்கும் நூலாகும்?**

**அ) CRPF ☑**

ஆ) ITBP

இ) இந்திய கடலோரக் காவல்படை

ஈ) SSB

✓ மத்திய சேமக்காவல்படையின் (CRPF) வரலாற்றை விவரிக்கும் நூலை உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்டார். 'ராஷ்டிர பிரதம் – 82 வர்ஷோன் கி ஸ்வர்னிம் கதா' என்று பெயரிடப்பட்ட இந்நூல், CRPF'இன் பயணம், சவால்கள் மற்றும் வெற்றிகள் பற்றிய முழுமையான ஆராய்ச்சி கட்டுரைகளை உள்ளடக்கியது. CRPF உருவாக்கப்பட்ட கடந்த 1939ஆம் ஆண்டில் இருந்து அதன் வரலாற்றை இந்நூல் விவரிக்கிறது.

---

**7. கணவரின் பரம்பரைச்சொத்தில் பெண்களுக்கு இணை உரிமை–யை வழங்கும் அவசர ஆணையை நிறைவேற்றியுள்ள மாநிலம் எது?**

அ) தமிழ்நாடு

ஆ) கேரளம்

**இ) உத்தரகண்ட் ☑**

ஈ) ஹிமாச்சல பிரதேசம்

✓ உத்தரகண்ட் மாநில அரசு ஓர் அவசர ஆணையை நிறைவேற்றியுள்ள–து. இந்த அவசர ஆணை, கணவரின் பரம்பரைச்சொத்தில் பெண்களுக்–கு இணை–உரிமைகளை வழங்குகிறது. இந்த உத்தரவு உத்தரகண்ட் ஜமீன்தாரி ஒழிப்பு & நிலச்சீர்திருத்த சட்டத்தை திருத்தியமைக்கிறது.

---

**8.2021 பிப்ரவரியில் இந்தியப் பெருங்கடல் பிராந்திய பாதுகாப்பு அமைச்சர்களின் மாநாட்டை நடத்திய நாடு எது?**

**அ) இந்தியா ☑**

ஆ) இலங்கை

இ) வங்காளதேசம்

ஈ) இந்தோனேசியா

✓ ஏரோ இந்தியா – 2021 நிகழ்வின் ஒருபகுதியாக, இந்தியா, 2021 பிப்.4 அன்று இந்தியப்பெருங்கடல் பிராந்திய பாதுகாப்பு அமைச்சர்களின் மாநா–ட்டை நடத்தியது. "Enhanced Peace, Security and Cooperation in the Indian Ocean" என்பது இம்மாநாட்டின் கருப்பொருளாகும். இம்மாநாட்டின் போது, இந்தியப்பெருங்கடல் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கு ஏவுக–ணை அமைப்புகள், LCA மற்றும் பிற ஆயுத அமைப்புகளை வழங்கத் தயாராக இருப்பதாக இந்தியா அறிவித்தது.

---

**9.செவ்வாய் கோளிலிருந்து ஒலியைக்கைப்பற்றி வெளியிட்ட முதல் நாடு எது?**

அ) ஐக்கிய அரபு அமீரகம் **ஆ) அமெரிக்கா (USA) ☑**

இ) ஐக்கியப்பேரரசு (UK) ஈ) இந்தியா



- ✓ அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான NASA செவ்வாய் கோளின் முதல் ஒலியை வெளியிட்டுள்ளது. இது 'Perseverance' ஊர்தியால் பதிவு செய்யப்பட்டதாகும். இவ்வொலி செவ்வாய் கோளில் உள்ள காற்றின் மங்கலான முறிவொலியாகும்.
- ✓ இந்த ஊர்தி, செவ்வாய் கோளின் மேற்பரப்பில் இறங்கும்போது அதன் ஒலிவாங்கி வேலைசெய்யவில்லை என்றாலும், அது தரையிறங்கியபின் ஒலியைக்கைப்பற்றியது. இந்த ஊர்தியின் தரையிறங்கல் காணொளி –யையும் NASA வெளியிட்டுள்ளது.

---

**10.நடப்பாண்டில் வரும் (2021) தேசிய அறிவியல் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ) Children in Science

ஆ) Youth in Science



**இ) Future of STI: Impacts on Education, Skills, and Work ☑**

ஈ) Artificial Intelligence in Science

- ✓ சர் CV ராமன் நோபல் பரிசுபெறுவதற்கு வழிவகுத்த, "ராமன் விளைவு" கண்டுபிடிக்கப்பட்ட நாளை (28-02-1928) நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் பிப்.28 அன்று தேசிய அறிவியல் நாள் கொண்டாடப்படு –கிறது. "Future of STI: Impacts on Education, Skills, and Work" என்பது நடப்பாண்டில் (2021) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான (MBC) இட ஒதுக்கீட்டில் வன்னிய –ர்களுக்கு 10.5 சதவீத உள் ஒதுக்கீடு வழங்க வகை செய்யும் மசோதா சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், சீர்மரபினருக்கு 7 சதவீத தனி இட ஒதுக்கீடு வழங்கவும் மசோதா தாக்கல் செய்யப்பட்டது. இரண்டு மசோதாக்களும் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்மூலம் MBC இட ஒதுக்கீட்டுப் பிரிவில் MBC–V என்ற உட்பிரிவு உருவாக்கப்பட்டு, அதன்மூலம் அரசு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் வன்னியர்களுக்கு 10.5 சதவீத உள் ஒதுக்கீடு வழங்க மசோதா வகை செய்கிறது. இந்த மசோதாவுக்கு, தமிழ்நாட்டின் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் ஒப்புதல் அளித்துள்ளார்.

---